[1972 மார்ச் 1

திரு. அ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு விடுதிகளில் இடம் கிடைக்காததால், வெளியிலே தங்கிப் படிக்க வேண்டியதாக இருக்கிறது. அது மாணவர்களுடைய தவறு இல்லை. ஆகவே, அப்படி வெளியிலே இருக்க வேண்டிய அவசியத்தில் உள்ள மாணவர்களுக்கும் இந்த உதவித் தொகையைக் கொடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அப்படிப்பட்ட நிலையில் உதவி கொடுக்க திட்டம் இப்பொழுது ஒன்றும் இல்லை.

பல்லடம் வட்டத்தில் மின்சார நிறைவு விழா

* 273 வினா—**திரு. என். குமாரசாமி:** மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை ஜில்லாவில், பல்லடம் தாலூக்காவில் மின்சார நிறைவு விழா ஏதேனும் அரசாங்கத்தால் கொண்டாடப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், இன்னும் பல கிராமங்களில் அரிஜன சேரிகளுக்கு விளக்குகள் இல்லாமல் இருப்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) பல்லடம் வட்டத்தில் 27—9—1971 வரையில் மாவட்ட அரிசன நல அதிகாரி மற்றும் பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் கொடுத்த பட்டியல்களின்படி எல்லா அரிசன குடியிருப்புகளுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டுவிட்டது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, இன்னும் பல கிராமங்களில் விளக்குகள் கொடுக்காமலேயே, காரியம் பூராவும் நிறைவு பெறாமலேயே, பூர்த்தி செய்துவிட்டதாக அதிகாரிகள் நினைத்துக்கொண்டு நிறைவு விழாக்கள் கொண்டாடுகிறார்கள். ஆனால், ஜனங்கள் பூர்த்தி செய்யவில்லை என்று சொல்லி, அரி ஜனங்கள் அல்லல்படுகிறார்கள். இதற்கு அரசாங்கம் இனியாவது அப்படிப்பட்ட நிலைகள் இல்லாமல் அந்தக் கிராமங்களுக்கும் மின் வசதி கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எதையாவது குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். உறுப்பினர் சில கிராமங்களைப் பற்றிக் கேட் டார்கள். வாரியத்தால் செய்ய வேண்டிய வேலைகள் முடிவு

1972 மார்ச் 1]

பெற்றுவிட்டன. செக்யூரிடி டெபாசிட் கட்டி, மின்சாரத்தைப் பெறவேண்டியது பஞ்சாயத்தின் கடமை. வாரியத்தில் எந்தத் தவறும் இல்லை.

அரசு பேருந்துகளில் வேகமானிகள்

*274 வின—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

அரசு உந்து வண்டிகளில், ஸ்பீடோ 'மீட்டர்' களைப் பொறுத்தி வேகத்தை நிர்ணயிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாவட்டப் பேருந்து களில் வேகமானிகளைப் (Speedo meters) பொருத்தும் செயற் குறிப்பு பரிசிலனையில் உள்ளது. மாநகரப் பேருந்துகளைப் பொறுத்தவரை, வேகமானிகளைப் பொருத்துவது சிக்கனமற்றது என்று கருதப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, டி.வி.எஸ். நிறுவனத் தில் ஸ்பீடோ மீட்டார்கள்—வரைவுமானிசன் பொருத்தப்பட்டு, நல்ல முறையில் பேருந்துகள் நடத்தப்பெற்றுள்ளன. அதைப போல வருங்காலத்திலாவது பாண்டியன் பஸ் போக்குவரத்து நிறுவனத்தில் பேருந்துகளுக்குப் பொருத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஸ்பீடோ மீட்டர்—வேகமானி—என்று ஒன்று இருக்கிறது. டேக் கோ மீட்டர்—வரைவுமானி—என்று ஒன்று இருக்கிறது. வேக மானி என்பது வேறு. வரைவுமானி என்பது வேறு. பாண் டியன் பஸ் போக்குவரத்து நிறுவனத்தில், டி.வி.எஸ். நிறுவனத்தில் உள்ளதைப்போல வரைவுமானி இருக்கிறது. அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலும்கூட விரைவு பேருந்துகளில் டேக்கோ மீட்டர்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. கனம் உறுப்பினர் எப்படிக் கருதுகிறரோ அதைப்போன்றே பாண்டியன் பஸ் போக்குவரத்துக் கழகத்திலும் தொடர்ந்து நீடித்து, அந்த முறைகள் செயல்பட்டுவருகின்றன.